

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 119 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு வள்ளியூரில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருஉருவசிலைக்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.நிகழ்வில் கழக நிர்வாகிகள் சித்திக், ஆதிபாண்டி, நம்பி, அனுராதா, சந்திரகலா, பரமசிவ அய்யப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ், போர்வெல் கணேசன், செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, சுபாஷ் தங்கபாண்டியன், மணி சூரியன் சேதுராமலிங்கம், தமிழ்வாணன், மாடசாமி, முருகன், ஆச்சியூர் ராமசாமி, இசக்கிபாண்டி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் – குழந்தைகள் பாதுகாப்பில்லை, விலைவாசி உயர்வைக் கண்டித்து

கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!


ரேகா பிரியதர்ஷினி - மருத்துவர் மலர்விழி கண்டன உரையாற்றினர்!

கள்ளக்குறிச்சி, நவ. 2 - நிர்வாகத் திறனற்ற, செயலற்ற டம்மி முதல மைச்சரின் ஆட்சியில் சட் டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண் டித்து கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த மாவட்ட மகளிர் அணி மற்றும் மக ளிர் தொண்டரணி சார் பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

கள்ளக்குறிச்சி மந்தவெ ளியில் நடைபெற்ற ஆர்ப் பாட்டத்திற்கு தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அஸ்வினி செந்தில்குமார், வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கலா சுந்தர மூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினர். தெற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பா ளர் ராதிகா சக்கர பாணி,வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அன்பு அன் பரசு முன்னிலை வகித்த னர், மகளிர் தொண்ட ரணி மாநில துணை செயலாளர் ரேகா பிரிய தர்ஷினி, கல்வியாளர் அணி மாநில இணை செய லாளர் மருத்துவர் மலர் விழி கண்டன உரையாற் றினார்கள்.

இந்த மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டத்தில் நிர்வாக திறனற்ற தவெக ஆட்சியில் டம்மி முதல்வ ராக செயல்பட்டு வரும் ஜோசப் விஜயை கண் டித்து பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பி னர். இந்த ஆட்சியில் சட் டம் ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது, பெண்கள், குழந் தைகளுக்கு பாதுகாப்பு இல்லை, அத்தியாவசிய பொருட்களின் விலை வாசி உயர்வால் பொதுமக் கள் மிகவும் பாதிப்ப டைந்து உள்ளனர், நாட்டில் மது கலாச்சாரம் பெருகி உள்ளது என்பது குறித்து கண்டன கோஷம் எழுப்பினார்கள்.

இந்த கண்டன ஆர்ப் பாட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் எம்எல்ஏ தா. உதயசூரியன், தெற்கு மாவட்ட துணை செயலா ளர் புவனேஸ்வரி பெரு மாள், முன்னாள் எம்எல்ஏ அழகுவேல் பாபு மற்றும் தனலட்சுமி, விமலா, தவ மணி, சீலா ராஜேந்திரன், யுவராணி உள்ளிட்ட மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், சார்பு அணிகளை சேர்ந்த மகளிர் நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதி கள் உள்ளிட்ட பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.





தி.மு.க. இளைஞர் அணி



தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் **ரூ.6,25,000/–** வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், நவம்பர் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

வ. எண்	பெயர், முகவரி
1.	மா.லோகதர்ஷினி, த/பெ மாதேஷ்வரன், 14–வது வார்டு, பெரியார் நகர், அரூர், தருமபுரி – 636 903
2.	மு.பாபு, த/பெ முத்துசாமி, 10, சொக்கம்பட்டி, கொட்டாம்பட்டி, மேலூர், மதுரை – 625 103
3.	ரா.செந்தில், த/பெ ராகதேவர், 5/ஏ, செங்கோட்டையன் குடியிருப்பு, மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476
4.	ஏ.முனுசாமி, த/பெ ஏகாம்பரம், 8, துர்கையம்மன் கோயில் வீதி, சாலையூர், ஜமீன்புதூர், மதுராந்தகம், செங்கல்பட்டு – 603 302
5.	ரா.கபாகாந்தி, த/பெ ராஜாகண்ணு, புதுமனைத் தெரு, சேந்தமங்கலம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி – 607 204
6.	ச.சோஜா, க/பெ சசிகுமார், 73, 2–வது குறுக்குத் தெரு, எஸ்.வி.எஸ்.நகர், வளசரவாக்கம், சென்னை – 600 087
7.	செ.தினேஷ் கணபதி, த/பெ செந்தில்குமார், 5/38, ராமசாமிபுரம் தெரு, டி.குண்ணத்தூர், பேரையூர், மதுரை – 625 708
8.	வெ.கல்பனா, க/பெ வெங்கடேஷ், 16/41, பருத்திவாக்கம் தெரு, ஆலந்தூர், சென்னை – 600 016
9.	ம.லக்கீஸ்வரன், த/பெ மணி, சி/66, ஹவுசிங் யூனிட், காந்திபுரம், கொல்லம்பாளையம், ஈரோடு – 638 002
10.	லோ.விஜய் கார்த்திகேயன், த/பெ லோகநாதன், 18, ஆஸ்பத்திரி தெரு, தம்மம்பட்டி, கெங்கவல்லி, சேலம் – 636 113
11.	ந.காளிதாஸ், த/பெ நடேசன், 1/113, வடக்குத் தெரு, நங்காளி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் – 614 715
12.	ஞா.ஷைனி, த/பெ ஞானசேகரன், சமத்துவபுரம், ஆமாஞ்சி, அறந்தாங்கி, புதுக்கோட்டை – 614 616
13.	உ.தன்வந்த், த/பெ உதயகுமார், 1/132, மக்கிரிபாளையம், சௌதாபுரம், குமாரபாளையம், நாமக்கல் – 638 008
14.	சா.மேகநாதன், த/பெ சாமிக்கண்ணு, 2/213, ஆலமர வட்டம், அண்ணாண்டபட்டி, கருப்பனூர், திருப்பத்தூர் – 635 602
15.	தி.சுப்ரமணியன், த/பெ தியாகராஜன், 6, டிஸ்பென்சரி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004
16.	இ.சண்முகபாரதி, த/பெ இளங்கோவன், 26, தேரடித் தெரு, போடிநாயக்கனூர், தேனி – 625 513
17.	ச.ஜெகதீசன், த/பெ சதீஷ்குமார், 28–அ, அரவிந்த் நகர், கோவர்த்தனகிரி, ஆவடி, திருவள்ளூர் – 600 071
18.	தி.தரணிதரன், த/பெ திருப்பதி, 2, அன்னை இல்லம், கென்னடி வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் – 641 652
19.	தே.ஞானசேகர், த/பெ தேசப்பன், 1, 2–வது தெரு, முகத்துவாரக் குப்பம், எண்ணூர், சென்னை – 600 057
20.	மு.லோக மீனாட்சி, த/பெ முத்துகுமார், 3–1–47, கிருஷ்ணன் கோயில் தெரு, ஆயக்குடி, தென்காசி – 627 852
21.	மு.ராமு, க/பெ முத்து, 23/45, பூங்குடியார் வீடு, சி.எம்.தெரு, காரைக்குடி, சிவகங்கை – 630 001
22.	சு.கலைச்செல்வி, க/பெ சுகுமாரன், 4/9, சாய் பவனம், ஜெயராம் நகர், தெலுங்குபாளையம், கோயம்புத்தூர் – 641 039
23.	க.சையத், த/பெ கனிபாய், 33, அக்கையா சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209
24.	ர.லோகேஷ், த/பெ ரவி, 160, மதனகோபாலபுரம், பெரம்பலூர் – 621 212
25.	சி.செபாஸ்டின், த/பெ சிறுமணி, 88/23, கோயில் வீதி, கிழக்கு மரியநாதபுரம், நாகல் நகர், திண்டுக்கல் – 624 003

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 31.10.2026

கலைஞர் 100 1924 - 2023



பண்டிகை தினத்தை முன்னிட்டு இராஜபாளையத்தில் பல்வேறு குழந்தைகள் காப்பத்தில் உள்ள குழந்தைகளுக்குப் புத்தாடைகளை எஸ்.தங்கபாண்டியன் வழங்கினார்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊர்களில் நடைபெறும் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்தான ஆலோசனைக் கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி மார்கண்டேயன் கலந்து கொண்டு நடைபெறும் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாணிக்கவாசகம்,மரிய மார்கரெட் வளர்மதி ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல் விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் நடராஜன், மாவட்டப் பிரதிநிதி ராமலிங்கம், வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சென்றாயப் பெருமாள், ஆகியோர் கலந்து கொண்டனர்.